முழுப்பதிப்புரிமையுடையது[All Rights Reserved]


மாகாணக்கல்வித்திணைக்களம், வடக்குமாகாணம்
Provincial Department of Education, Northern Province

(கல்விப்பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) நிலையறிபரீட்சை - 2021
**General Certificate of Education (Ord. Level) Examination - 2021**

கிறிஸ்தவம்
**Christianity**

| 15 | T | I,II |
|---|---|---|

மூன்றுமணித்தியாலம்
**Three Hours**

கவனிக்க:

(1) எல்லா வினாக்களுக்கும் விடைஎழுதுக.

(2) 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(3) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொருவினாவுக்கும் உரியவட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (✕) இடுக.

## பகுதி I

1. “அவர் பெரியவராய் இருப்பார், உன்னத கடவுளின் மகன் எனப்படுவார்.”என்ற இறைவார்த்தையில் யாரைப் பற்றிக் கூறப்படுகிறது.
   1.இயேசுவின் பிறப்பைப் பற்றி 2. எலியாவின் பிறப்பைப்பற்றி
   3.திருமுழுக்கு யோவானின் பிறப்பைப் பற்றி 4. மோசேயின் பிறப்பைப் பற்றி

2. திருமுழுக்குயோவானின் போதனையின்படி
   1. சமுதாயத்தைப் பற்றி இறைவாக்குரைக்கவேண்டும்.
   2. சமுதாயமாற்றத்திற்காகசெயற்படவேண்டும்.
   3. சமுதாயத்தில் உள்ளவர்களைவிமர்சிக்கவேண்டும்.
   4. திருமுழுக்குப் பெறவேண்டும்.

3. இஸ்ரவேல் மக்களின் பழக்கப்பட்ட தொழில்.
   1. விவசாயம் 2. மீன்பிடித்தல் 3. மந்தைமேய்த்தல் 4. தச்சுவேலை

4. இயேசுவை நல்லாயராகக் குறிப்பிடும் நற்செய்தி நூல் எது?
   1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா 4. யோவான்

5. மெசியா என்பதன் அர்த்தம்.
   1. பயிற்றப்பட்டவர் 2. அருட்பொழிவு பெற்றவர்
   3. கடவுள் நம்முடன் இருக்கிறார் 4. அனுப்பப்பட்டவர்

6. இஸ்ரவேல் வரலாற்றில் அருட்பொழிவு பெற்றவர்கள்.
   1. குருக்கள் 2. இறைவாக்கினர் 3. அரசர்கள் 4. மேற்கூறியயாவும் சரி

7. ஆபிரகாம் என்பதன் பொருள்.
   1. இனத்தின் தந்தை 2. உன்னததந்தை 3. ஆதிப்பிதா 4. வரலாற்றின் தந்தை

8. இறை நம்பிக்கைக்குஉரியவராய் இருந்தவர்
   1. மோசே 2. எலியா 3. யோபு 4. சவுல்

9. கடவுள் ஆபிரகாமுடனும்,அவரின் வழிமரபினருடனும் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளம்
   1. அர்ப்பணிப்பு 2. திருமுழுக்கு 3. விருத்தசேதனம் 4. திருமணம்



kalvi.lk

10. நாசரேத்தூர் தொழுகைக் கூடத்தில் இயேசு வாசித்த ஏட்டுச்சுருள் யாரால் எழுதப்பட்டது.
1. லூக்காவால் 2. பவுலால் 3. பேதுருவால் 4. ஏசாயாவால்

11. திருத்தூதர் என்பதன் பொருள்.
1. பயிற்றப்பட்டவர் 2. பிரிக்கப்பட்டவர்
3. சிறப்பானபணிக்காகபயிற்றப்பட்டுஅனுப்பப்பட்டவர் 4. அனுப்பப்பட்டவர்

12. பவுல் அன்பைக் குறித்துஎழுதியதிருமுகம்.
1. 1 கொரிந்தியர் 13ம் அதி. 2. எபேசியர் 13ம் அதி.
3. உரோமையர் 13ம் அதி. 4. கலாத்தியர் 13ம் அதி

13. ''ஐரேனியா''எனும் கிரேக்கசொல்லின் பொருள்.
1. சமாதானம் 2. சந்தோசம் 3. முழுமையான அன்பு 4. முழுமையான சமாதானம்

14. ''எவரும் என்னை ஆண்டவரே எனச் சொல்லாதீர்கள்'' இவ்வாறு கூறியவர்.
1. அருட்தந்தை திஸ்ஸபாலசூரியர் 2. அருட்தந்தை சந்திராபர்னாந்து
3. இரண்டாம் ஜுவாம் பவுல் 4. அருட்பணி பீற்றர் ஜெராட் டீ சில்வா

15. ஆபிரகாமின் குமாரத்திகள் என இயேசுவால் அழைக்கப்பட்டவர்கள்.
1. மார்த்தா,மரியா
2. மரியா,எலிசபெத்
3. இரத்தப்போக்குடையபெண், கூன்முதுகுடையபெண்
4. பாவியானபெண்,விபசாரத்தில் பிடிபட்டபெண்

16. ''உமதுநம்பிக்கைஉம்மைமீட்டது,அமைதியுடன் செல்க.''என இயேசுயாருக்குக் கூறினார்.
1. பாவியானபெண்ணுக்கு 2. மார்த்தாவிற்கு
3. இரத்தப்போக்குடையபெண்ணுக்கு 4. கூன்முதுகுடையபெண்ணுக்கு

17. இறைவனிடம் மன்னிப்பைப் பெறவேண்டுமாயின் நாம் பிறரை மன்னிக்கவேண்டும். என்பதனைவிளக்கும் உவமை
1. நல்லசமாரியன் உவமை 2. காணாமற்போன ஆடு உவமை
3. மன்னிக்கமறுத்த பணியாளன் உவமை 4. பெருவிருந்தின் உவமை

18. யாருடைய மரணத்திற்கு சவுல் உடந்தையாக இருந்தார்
1. ஸ்தேவானின் 2. ஆபேலின் 3. பேதுருவின் 4. யோவானின்

19. ''இனி உங்களிடையே யூதர் என்றும்,கிரேக்கர் என்றும்,அடிமைகள் என்றும்,உரிமைக் குடிமக்கள் என்றும் வேறுபாடில்லை, இவ்வாறு பவுல் எச்சபையினருக்கு எழுதினார்.
1. கலாத்தியர் 2. எபேசியர் 3. கொரிந்தியர் 4. தெசலோனிக்கேயர்
2.

20. வானதூதர் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி நம்பிக்கையற்றவர்கள்.
1. பரிசேயர் 2. மறைநூல் அறிஞர் 3. வரிதண்டுவோர் 4. சதுசேயர்

21. ''ஓய்வு நாளும் மானிடமகனுக்குக் கட்டுப்பட்டதே.'' என இயேசு கூறியதன் பின்னணி.
1. கைசூம்பியவர் குணப்பட்டவேளை
2. கூன்முதுகுடையவர் குணப்பட்டவேளை
3. ஓய்வுநாளில் சீடர்கள் பயிர்களைக் கொய்து சாப்பிட்டவேளை
4. சகேயுவின் வீட்டில் விருந்துண்டவேளை

22. இயேசு உயிர்த்தெழுந்து ஐம்பதாவது நாள் கொண்டாடப்படும் விழா
1. பாஸ்காவிழா 2. பெந்தேகோஸ்தேவிழா 3. சேகரிப்புவிழா 4. கூடாரவிழா

23. பேதுருயோப்பாவில் சீமோனின் வீட்டில் கண்ட தரிசனத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்ளும் விடயம் அல்லாதது.
1. ஓவ்வொருவரின் தராதரமும் பார்த்துச் செயற்படவேண்டும்
2. கடவுளின் குரலுக்குச் செவிசாய்க்கவேண்டும்
3. கடவுளுக்குஎப்போதும் கீழ்ப்படியவேண்டும்
4. தேவையானஅனைவருக்கும் பணிசெய்யவேண்டும்.



kalvi.lk

24. "நீர் உமக்கு ஏதும் தீங்கு செய்து கொள்ளாதீர்." என்று பவுல் யாருக்குக் கூறினார்.
1. மார்க்கு எனப்பட்ட யோவானுக்கு 2. யூலியு எனும் படைத்தலைவனுக்கு
3. குறிசொல்லும் பெண்ணுக்கு 4. சிறைக்காவலனுக்கு

25. கூற்று :--- இயேசு பாவியான சகேயுவை மன்னித்து புதுவாழ்வு அளித்தார்.
காரணம் :--- இயேசு பாவிகளை இரட்சிக்கவே இவ்வுலகிற்கு வந்தார். இதன்படி
1 கூற்றுசரி, காரணம் பிழை 2. கூற்றும் காரணமும் சரி
3. கூற்றுபிழை, காரணம் சரி 4. கூற்றும் காரணமும் பிழை

26. பவுல் எழுதிய திருமுகங்களின் எண்ணிக்கை
1. பதின்மூன்று 2. பன்னிரெண்டு 3. பதினொன்று 4. பத்து

27. கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்கு கிறிஸ்தவர் என்ற பெயர் முதன் முதலில் கிடைத்த இடம்.
1. லீஸ்திரா 2. அத்தாலியா 3. சீரியாஅந்தியோக்கியா 4. சாலமி

28. பர்னபாவின் பிறப்பிடம்
1. பாப்போ 2. லீஸ்திரா 3. தெருபை 4. சூலமி

29. இயேசு சிலுவையில் இறுதியாகக் கூறிய வார்த்தை.
1. "தாகமாயிருக்கிறேன் "
2. "எல்லாம் நிறைவேறிற்று"
3. "பிதாவே உமது கரங்களில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்."
4. "என் இறைாவா,என் இறவைா ஏன் என்னைக் கைவிட்டீர்"

30. "நீர் யூதர்களின் அரசனானால் உன்னைக் காப்பாற்றிக்கொள்." என்று கூறியவர்.
1. படைவீரர் 2. பெண்கள் 3. பிலாத்து 4. ஏரோது

31. இயேசுவின் திருமுழுக்கைப் பற்றிக் கூறப்படாத நற்செய்தி நூல்.
1. மத்தேயு 2. மார்க்கு 3. லூக்கா 4. யோவான்

32. இறையரசின் வளர்ச்சியைக் குறிக்கும் உவமை அல்லாதது.
1. கடுகுவிதை 2. பெருவிருந்து 3. புளித்தமா 4. விதைப்பவன் உவமை

33. யூத முறைப்படி குற்றம் இழைத்தோரை எத்தனை முறை மன்னிக்கவேண்டும்.
1. நான்குமுறை 2. ஐந்துமுறை 3. ஆறு முறை 4. ஏழு முறை

34. இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோருக்கான எமது பணி.
1. அவர்களுக்கு திருச்சபையில் அங்கத்துவம் பெற்றுக் கொடுத்தல்
2. அவர்கள் வாழ்வை மீளக்கட்டியெழுப்ப உதவுதல்
3. பிள்ளைகளைக் கிறிஸ்தவ பாடசாலையில் சேர்த்தல்
4. அவர்களின் சரீர தேவைகளை நிறைவு செய்தல்

35. பவுலிடமிருந்து கிறிஸ்தவ பணியாளர் பெற்றுக் கொள்ளக்கூடிய முக்கிய முன் மாதிரி.
1. சந்தர்ப்பத்திற்கு ஏற்ப புத்தியுடன் சவால்களை வெல்லல்
2. பிரச்சினைகள் ஏற்படும் போது சகபணியாளரை நாடுதல்
3. தனக்கு புகழைத் தேடிக் கொள்ளல்
4. பிரச்சினைகள் ஏற்படும் போது பணியை நிறுத்துதல்

36. "என் பெயரின் பொருட்டு எத்துணை துன்புற வேண்டும் என்பதை நான் அவருக்கு எடுத்துக் காட்டுவேன்." என்ற வசனத்துடன் தொடர்புடையவர்.
1.பேதுரு 2. பர்னபா 3. பவுல் 4. தீமோத்தேயு

37. பவுல் துன்பங்களையும்,சவால்களையும் வெற்றிகொண்ட இடம்.
1. எதென்ஸ் 2. கொரிந்து 3. பெருகை 4. பிலிப்பி



kalvi.lk

38. அனைத்து மக்களிடையேயும் அமைதியுடனான சகவாழ்வை ஏற்படுத்துவதற்கு
   1. சமுதாயப் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும்
   2. கூட்டுச் சிந்தனைகள் செயற்படுத்தப்பட வேண்டும்
   3. பொருளாதாரவளர்ச்சிஏற்பட வேண்டும்
   4. யாவற்றையும் பகிர்ந்து கொடுக்க வேண்டும்

39. சமுதாயத்தில் கிறிஸ்தவனின் பொறுப்பு.
   1. இறையரசின் விழுமியங்களின் படி சமுதாயத்தை மாற்றியமைத்தல்
   2. பிறருடன் சேர்ந்து புதிய சமுதாய அமைப்பைக் கொண்டு வருதல்.
   3. சமுதாயத்தில் கிறிஸ்தவ அடையாளத்திற்கு முதலிடம் கொடுத்தல்
   4. சமுதாயத்தில் செல்வந்தர்களுக்கு முதலிடம் அளித்தல்

40. பவுல் மனந் திரும்பிய பின்
   1. யூதரைப் புறக்கணித்தார்
   2. பரிசேய சட்டங்களைப் பின்பற்றினார்
   3. இறைவிருப்பின்படி தீர்மானங்களை எடுத்தார்
   4. தம் பிறப்புரிமையை விட்டார்.

**(40x1=40புள்ளிகள்)**

## பகுதி – 11

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

1.
   1. “உலகில் நீதியை நிலைநாட்டும் வரை அவர் சோர்வடையார்.” இதனைக் கூறிய இறைவாக்கினர் யார்? யாரைக் குறித்துக் கூறினார்?
   2. இயேசுவால் ஓய்வு நாளில் குணப்படுத்தப்பட்ட இருவரைத் தருக?
   3. “சோதனைக்குட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்.”என இயேசு யாருக்குக் கூறினார்?
   4. சனகரீம் என அழைக்கப்படுவது யாது? அதில் எத்தனை பேர் அங்கம் வகிப்பர்?
   5. இயேசு செய்த அற்புதங்கள் அடங்கியுள்ள நற்செய்தி நூல்கள் இரண்டு தருக?
   6. மனிதருக்கும், சகமனிதருக்கும் இடையிலான உறவின் பண்புகளை விளக்கும் இரண்டு கட்டளைகளைத் தருக?
   7. பெந்தேகோஸ்தே தினத்தில் தூய ஆவியின் வருகையின் போது நடைபெற்ற இரண்டு நிகழ்வுகளைத் தருக?
   8. இரண்டாம் தூதுரைப் பயணத்தில் பவுலுடன் சென்ற இருவரைத் தருக?
   9. “மனிதர்களே, ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் நாங்களும் உங்களைப் போன்று மனிதர்கள் தாம்” இவ்வாறு யாரால், யாருக்குக் கூறப்பட்டது?
   10. திருத்தொண்டர்கள் எத்தனை பேர்? அவர்களின் தலைவன் யார்?

**(2x10=20புள்ளிகள்)**

2. (அ) “ஆழத்திற்குத் தள்ளிக் கொண்டு போய் மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்”என்று இயேசு யாருக்குக் கூறினார்?
   (ஆ) இயேசு திருத்தூதர்களைப் பணிக்கு அனுப்பும் போது கொடுத்த பொறுப்புக்கள் ஏவை?
   (இ) உம்மால் செய்யக் கூடிய இறைபணிகள் சிலவற்றைத் தருக?

**(2+3+5=10புள்ளிகள்)**

3. (அ) எருசலேம் தேவாலயம் யாருடைய மையமாக இருந்தது?
   (ஆ) சதுசேயர் இயேசுவிடம் கேட்ட வினாக்கள் எவை?
   (இ) சதுசேயர் இயேசுவிடம் கேட்ட வினாக்களின் மூலமும் இயேசு கூறிய பதில்களின் மூலமும் நீர் பெற்றுக் கொள்ளும் வழிகாட்டல்கள் எவை? **(2+3+5=10புள்ளிகள்)**

4. (அ) இஸ்ரவேலில் ஆயர்களாக செயற்பட்டவர்கள் மூவரைத் தருக?
   (ஆ) நல்லாயரின் பண்புகள் எவை?
   (இ) இயேசுவை நல்லாயர் எனக் கூறுவதற்கான காரணங்கள் எவை?

**(2+3+5=10புள்ளிகள்)**



kalvi.lk

5. (அ) பவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த ஆரம்பித்தது எவ்வாறான சூழலில்?
(ஆ) பவுலின் மனமாற்றத்திற்கான காரணங்கள் எவை?
(இ) பவுலின் மனமாற்ற அனுபவத்தினூடாக நாம் பெறும் முன்மாதிரிகள் எவை?

**(2+3+5=10புள்ளிகள்)**

6. (அ) மன்னித்தல் பற்றி இயேசுவின் போதனைகள் யாவை?
(ஆ) இப்போதனைகளை அவர் எவ்வாறு தமது வாழ்வில் கடைப்பிடித்தார்?
(இ) கிறிஸ்தவன் என்ற ரீதியில் நீர் வாழும் சூழலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்கு இயேசுவின் வாழ்க்கை முன்மாதிரி எவ்வாறு உதவுகின்றது?

**(2+3+5=10புள்ளிகள்)**

7. சிறு குறிப்பு எழுதுக. (**விரும்பிய இரண்டிற்கு**)
(அ) இயேசுவின் தோற்றம் மாறுதல்/மறுரூபமாதல்
(ஆ) இயேசு சோதிக்கப்படல்
(இ) சவுலின் மனந்திரும்புதல்
(ஈ) திருமுழுக்குயோவானின் பணி

**(2x5=10புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education கல்வி அධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page